**<u>Deposition of witness</u>**

**<u>(Chapter XXII Code of Criminal Procedure)</u>**
**-----------**

**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR</u>**

| | | |
|---|---|---|
| Calender | : | அசல் வழக்கு எண்.299/2014 |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | வா.சா.2.திரு.சுந்தர் த.பெ.ராஜகோபால் |
| Court | : | District Munsif Court, Melur. |
| Name | : | |
| Husband's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of  of the 11th day of December 2023

11.12.2023
O.S.No.299/2014

வா.சா.2.திரு.சுந்தர் த.பெ.ராஜகோபால்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**முதல் விசாரணை**

நான் வாதி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. 13.10.1946 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் அது **வா.சா.ஆ-1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. 21.02.1976 தேதியிட்ட மேலூர் வட்டாட்சியர் அனுப்பிய அறிவிப்பு நகல் அது **வா.சா.ஆ-2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. **(மேற்படி ஆவணம் நகல் என்ற பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது**) லட்சுமி அம்மாள் கடனை அடைத்து முடித்ததற்கான 03.08.1976 தேதியிட்ட Discharge Certificate அது **வா.சா.ஆ-3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. லட்சுமி அம்மாளின் சகோதரி சியாமளா மேலூர் வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பிய கடிதம் நகல் அது **வா.சா.ஆ-4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. 13.02.1997 தேதியிட்ட பொது அதிகார பத்திரம் அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் அது **வா.சா.ஆ-5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. 31.05.2011 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் அது **வா.சா.ஆ-6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.